நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

09.03.2025

# மதவாத அமைப்புகளின் பிரித்தாளும் சூழ்ச்சியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்

## தொல்.திருமாவளவன்



மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு மாநாட்டில் பேசிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.

**மதுரை, மார்ச் 9:** மதவாத அமைப்புகளின் பிரித்தாளும் சூழ்ச்சியை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கூறினார்.

மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பின் சார்பில், மதுரையில் மத நல்லிணக்க மாநாடு கிருஷ்ணய்யர் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநாட்டுக்கு வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தலைமை வகித்தார்.

மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன் பேசியதாவது:

மத நல்லிணக்க மாநாட்டை மதுரையில் நடத்தக் கூடாது என்று காவல் துறை, வருவாய்த் துறை தடுத்தது அதிர்ச்சி அளிக்கிறது. தமிழக முதல்வர் மதவாத சக்திகளை எதிர்த்துப் போராடி வருகிறார். இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், மதுரை மாநகரக் காவல் துறை, மாவட்ட நிர்வாகம் மத நல்லிணக்க அமைப்புகளுக்கு தொடர்ந்து அனுமதி மறுப்பது கண்டிக்கத்தக்கது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் மதத்தின் மீது நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையில் யாரும் தலையிடக் கூடாது. இந்த நடைமுறையை அனைவரும் பின்பற்றினால் மத நல்லிணக்கம் துளிர்க்கும். ஹிந்து மத நம்பிக்கை வேறு, ஹிந்து மத நம்பிக்கையைப் பயன்படுத்தி அரசியல் செய்வது வேறு. மதத்தை கையில் எடுத்து அதற்கு எதிரான அரசியலை விதைப்பதால்தான் பிரச்னை எழுகிறது. இந்தச் சூழ்ச்சியை ஹிந்து மதப் பற்றாளர்கள், குருக்கள், மதத்தைச் சார்ந்தவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஹிந்துக்களிடம் இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை அந்நிய மதம் என வேற்றுமைப்படுத்துகின்றனர். சிறுபான்மைச் சமூகத்தினர் மீது வெறுப்பை விதைக்கின்றனர். மக்கள் சாப்பிடும் உணவை முன் வைத்து அரசியல் செய்து வருகிறது ஹிந்து மதவாத அமைப்புகள்.

பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் இந்தியன் என்ற உணர்வின் அடிப்படையில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர்களை நமது நாட்டிலிருந்து வெளியேற்றப் போராடினார்கள். ஆனால், தற்போது பிரித்தாளும் சூழ்ச்சியைப் பயன்படுத்தி பாஜக ஆட்சியில் நீடிக்கப் பார்க்கிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீட்டை அளித்த பாஜக, ஓபிசி பிரிவினருக்கு பாரபட்சம் காட்டி வருகிறது.

சட்டம்- ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமென்றால் மத நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

மாநாட்டில் முக்கியப் பிரமுகர்களின் பேச்சு விவரம்:

**தமிழக ஆயர் பேரவைத் தலைவர் லாரன்ஸ் பயஸ்:** திருப்பரங்குன்றம் தமிழக மத நல்லிணக்கத்துக்கு பெரும் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. இதைச் சீர்குலைக்க சில அமைப்புகள் முயற்சிக்கின்றன. தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக மக்களைப் பிளவுபடுத்த சில அமைப்புகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. மக்கள் ஒற்றுமையாக இருந்து மதவாத சக்திகளை முறியடிக்க வேண்டும்.

**நெல்லையப்பர் ஆதீனம் பதினெண் சித்தர் பீடம் சித்தர் மூங்கிலடியார்:** தமிழர்களிடம் ஒற்றுமையில்லை. தமிழும், சம்ஸ்கிருதமும் இரு கண்கள் போன்றவை என்றவர்கள்தான் மதத் தலைவர்களாக உள்ளனர். தமிழர்கள் மதத் தலைவர்களாக இருந்தால்தான் நமது மாநிலத்தில் மத நல்லிணக்கம் தழைக்கும்.

**எஸ்டிபிஐ மாநிலத் தலைவர் நெல்லை முபாரக்:** தமிழக முதல்வர் சமூக நீதிக்காக பாடுபட்டு வருகிறார். ஆனால், காவல் துறை, மாவட்ட நிர்வாகம் ஹிந்து மதவாத அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்படுகின்றன. இவற்றை முதல்வர் கவனிக்க வேண்டும். தற்போது மதுரையில் மட்டும் உருவாகியுள்ள மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு தமிழகம் முழுவதும் செயல்பட உள்ளது.

இதைத்தொடர்ந்து, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தமிழ்நாட்டின் மதநல்லிணக்க மலையாக திருப்பரங்குன்றம் மலையை தமிழ்நாடு அரசு அறிவிக்க வேண்டும். 1923 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 25-ஆம் தேதியன்று மதுரை சார்பு நீதிமன்ற நீதிபதி ராம அய்யர் வழங்கிய தீர்ப்பின்படி, கோயில், பள்ளிவாசல் நிர்வாகங்களின் உரிமைப் பகுதிகள் வரையறுக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில், திருப்பரங்குன்றம் கோயில் மலை விவகாரத்தில் வன்முறையைத் தூண்டிய கட்சிகள், அமைப்புகள், உயர்நீதிமன்றத்தில் உறுதிமொழி கொடுத்துவிட்டு, அதை மீறிய நபர்கள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரை மாவட்ட நிர்வாகம், மாநகர், புறநகர் காவல்துறை அதிகாரிகள் திருப்பரங்குன்றம் மலையை முன் வைத்து பிரச்னையை உருவாக்கும் மதவாத அமைப்புகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகைதீன், மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலர் அப்துல் சமது, மதிமுக மாநிலப் பொருளாளர் செந்திலதிபன், சட்டப்பேரவை உறுப்பினர் மு.பூமிநாதன், மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன், மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் சு.க.முருகவேல்ராஜன், அரச யோகி கருவூரார் தமிழின குருபீடம் சத்தியபாமா அம்மா, தமிழ்புலிகள் நாகை திருவள்ளுவன், ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்த கு.ஜக்கையன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.